# டில்லி குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற மார்த்தாண்டம் கல்லூரி மாணவர் கவுரவிப்பு

மார்த்தாண்டம், பிப்.10- டில்லியில் நடந்த 73வது ஆண்டு குடியரசு தினவிழாவில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள் சார்பில் என்.சி.சி., மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில், மதுரை குரூப்பில் நாகர்கோவில் தமிழ்நாடு பட்டாலியன் சார்பில் மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி வரலாற்றுத்துறை மூன்றாமாண்டு என்.சி.சி., மாணவர் ஜெரின் பலகட்ட தேர்வுக்குப்பின் கலந்து கொண்டார்.

கடந்த டிச. 3ம் தேதி ஆரம்பித்த குடியரசு தின முகாம் 30 நாட்கள் நடந்தது. அணிவகுப்பு மற்றும் முகாமில் கலந்துகொண்டு சென்னை திரும்பிய மாணவ, மாணவியருக்கு சென்னை கவர்னர் மாளிகையில் வரவேற்பு மற்றும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.



■ டில்லி குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்டு திரும்பிய மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி என்.சி.சி., மாணவன் ஜெரின் கவுரவிக்கப்பட்டார்.

குமரிமாவட்டம் வந்த ஜெரினை 11 தமிழ்நாடு பட்டாலியன் சார்பில் கமாண்டிங் ஆபிசர் கர்னல் வினோத் பாஸ்கர், நிர்வாக அதிகாரி லெப்டினன்ட் கர்னல் அன்சாரி முறைப்படி ஆகியோர் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து மார்த்தாண்டம் கல்லூரி திரும்பிய ஜெரினுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் தாளாளர் ஜெயச்சந்திரன் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். கல்லூரி முதல்வர் பால்ராஜ், கல்லூரி ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள் பிராங்கிளின், சுவாமிதாஸ், செல்வகுமார், என்.சி.சி., அதிகாரி லெப்டினன்ட் பாபிட் வெஸ்லி, பேராசிரியர் டிபி தாமஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.